**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

அசல் வழக்கு எண். 90/2023

நாள் : 29.01.2025

வா.சா.1 திரு.ராஜேந்திரன் என்பவரை மீண்டும் வரவழைத்து விசாரிக்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனுவானது I.A.No.09/2024, நாள் :23.01.2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில், மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் இந்த வழக்கில் வாதி. எனது முதன்மை விசாரணை சாட்சியத்தை ஏற்கனவே தாக்கல் செய்துவிட்டேன். தற்போது கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

ஆவணங்கள்

| வ.எண் | தேதி | ஆவணங்கள் | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1) | 13.03.2006 | வா.சா.ஆ.14 | பாண்டிக்கு முனியம்மாள் மற்றும் மூன்றுபேர்கள் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் | வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |

மேற்படி ஆவணம் வளைத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட எலக்ட்ரானிக்ஸ் எவிடன்ஸ் என்பதால் இந்திய சாட்சிய சட்ட பிரிவு 65 B (4) ன்படி சான்றிதழ் இணைக்கப்படவில்லை. எனவே மேற்படி சான்றிதழ் தாக்கல் செய்வதை பொறுத்து மேற்படி ஆவணத்தின் ஏற்றுக்கொள்ளும் தன்மை தீர்மானிக்கப்படும் என நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/—ஏ.கே.மெஹ்பூப் அலிகான் ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .